# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2277/58 - 2022 අප්‍රේල් මස 29 වැනි සිකුරාදා - 2022.04.29

*2277/58 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கை விவசாய சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு - 8 ஆவது திருத்தம்**

பின்வரும் பகுதி I இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்பட்ட 2014 செத்தெம்பர் மாதம் 19 ஆம் திகதிய மற்றும் 1880/26 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட இலங்கை விவசாய சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு பின்வரும் பகுதி II இல் காட்டப்பட்டுள்ளவாறு திருத்தியமைக்கப்படுகின்றது. அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்களும் நிபந்தனைகளும் மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப்பெறும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்புக்கமைய,

**எம். ஏ. பி. தயா செனரத்,**
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

2022 ஏப்பிறல், 27.


1A -G 36707 — 08 (2022/04)



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## *பகுதி* I

*திருத்த இலக்கம் 01 – 2016 யுன் மாதம் 15 ஆந் திகதிய மற்றும் 1971/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்*

*திருத்த இலக்கம் 02 – 2017 ஒகத்து மாதம் 17 ஆந் திகதிய மற்றும் 2032/33 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்*

*திருத்த இலக்கம் 03 – 2019 ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதிய மற்றும் 2146/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்*

*திருத்த இலக்கம் 04– 2020 பெப்புருவரி மாதம் 10 ஆந் திகதிய மற்றும் 2162/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்*

*திருத்த இலக்கம் 05 – 2020 மாச்சு மாதம் 03 ஆந் திகதிய மற்றும் 2165/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்*

*திருத்த இலக்கம் 06 – 2021 யுன் மாதம் 29 ஆந் திகதிய மற்றும் 2234/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்*

*திருத்த இலக்கம் 07 – 2022 சனவரி மாதம் 26 ஆந் திகதிய மற்றும் 2264/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்*

## *பகுதி* II

*7.2.2.5. ஏனைய தகைமைகள்: -*

*தொடரிலக்கம் (iii) நீக்கப்படுகின்றது. ஏனைய விடயங்கள் மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப்பெறும்.*

*7.2.4.1. திறந்த பிரிவின் கீழான ஆட்சேர்ப்புக்குரிய எழுத்துமூலப் போட்டிப் பரீட்சையானது இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்தது. அப்பரீட்சையுடன் தொடர்புடைய விடயங்கள் முதலாம் பின்னிணைப்பில் தரப்பட்டுள்ளன.*

*7.2.4.4. இல் தரப்பட்டுள்ள குறிப்பு பின்வருமாறு திருத்தியமைக்கப்படுகின்றது.*

*குறிப்பு: பரீட்சையின் முதலாவது மற்றும் இரண்டாவது பகுதியின் வினாப்பத்திரங்களுக்குப் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் ஆகக்கூடிய புள்ளி ஒழுங்கில் ஒவ்வொரு வினாத்தாளிலும் 40% அல்லது அதற்கு அதிகமான புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் பரீட்சார்த்திகள் மத்தியிலிருந்து வெற்றிடங்களின் எண்ணிக்கையில் இரண்டு மடங்குக்கு மேற்படாத எண்ணிக்கையினர் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள். நேர்முகப் பரீட்சைக்கான குழு விண்ணப்பதார்களின் தகைமைகளைப் பரிசீலித்த பின்னர் தகைமைகளை உறுதிப்படுத்துகின்ற விண்ணப்பதாரர்களுக்கு மத்தியிலிருந்து முதலாவது மற்றும் இரண்டாவது பகுதியின் அனைத்து வினாத்தாள்களுக்கும் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளினது கூட்டுத்தொகையின் ஆகக்கூடிய புள்ளி ஒழுங்கிற்கு ஏற்ப வெற்றிடங்களுக்கு ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவர்.*

*தற்போது காணப்படும் "முதலாம் பின்னிணைப்பு" க்குப் பதிலாகப் பின்வரும் "முதலாம் பின்னிணைப்பு" பிரதியீடு செய்யப்படுகின்றது.*

### முதலாம் பின்னிணைப்பு
### திறந்த பிரிவின் கீழ் இலங்கை விவசாய சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக நடாத்தப்படும் எழுத்துமூலப் போட்டிப் பரீட்சையின் பாடவிதானம்

*01. பரீட்சை நடைமுறை மற்றும் பாடவிதானங்கள் :-*

*அரசாங்க நிறைவேற்று உத்தியோகத்தர் வகுதியின் தரம் III இல் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான பொதுப் போட்டிப் பரீட்சை இதற்கு ஏற்புடையதாகும். பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இந்தப் பரீட்சையை வருடாந்தம் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இந்தப் போட்டிப் பரீட்சையின் முதலாம் பகுதியின் (பொதுப் பகுதி) ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் 40% இற்கு மேற்பட்ட புள்ளிகள் மற்றும் மொத்தப் புள்ளிகளாக 100 அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் பரீட்சார்த்திகள் மாத்திரம் மேற்படி பரீட்சையின் இரண்டாவது பகுதிக்கு அழைக்கப்படுவர்.*

**(அ) அரசாங்க நிறைவேற்று உத்தியோகத்தர் வகுதியின் தரம் III இல் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான பொதுப் போட்டிப் பரீட்யைின் முதலாம் பகுதி (பொதுப் பகுதி)**

(I) சாராம்சம்

| *வினாப் பத்திரம்* | *காலம்* | *வினாப்பத்திரத்தின் தன்மை* |
|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | 1 1/2 மணித்தியாலங்கள் | 10, புள்ளிகள், பல்தேர்வு வினாக்கள் மற்றும்/அல்லது சுருக்க வினாக்களைக் கொண்டிருக்கும். சித்தியெய்துவதற்காகப் பெற்றுக்கொள்ள வேண்டிய புள்ளிகள் 40. |
| கிரகித்தல் | 02 மணித்தியாலங்கள் | 100 புள்ளிகள், பல்தேர்வு வினாக்கள் மற்றும்/அல்லது சுருக்க வினாக்களைக் கொண்டிருக்கும். சித்தியெய்துவதற்காகப் பெற்றுக்கொள்ள வேண்டிய புள்ளிகள் 40. |

(II) பாட விதானம்

| |
|---|
| நுண்ணறிவுப் பரீட்சை |
| பரீட்சார்த்தியின் தர்க்கிக்கும் ஆற்றல், பிரதியிடல், பொருட்கோடல், தொடர்பு காணல், பெயர்ப்பு, பிரச்சினைகளைத் தீர்க்கும் இயலுமை,காரண காரிய தொடர்புகளைப் புரிந்துகொள்ளல், எதிர்வுகூறல், தகவல்களை ஒழுங்கமைத்தல், வடிவங்களை இனங்காணல் மற்றும் ஆலோசனைகளைப் பின்பற்றுதல் முதலிய இயலுமைகளை அளவிடுவதற்காக வடிவமைக்கப்பட்ட பல்தேர்வு வினாக்களைக் கொண்டது. |
| கிரகித்தல் |
| பரீட்சார்த்தியிடம் காணப்படும் விடயங்களைப் புரிந்து கொள்ளும் இயலுமை, தொடர்பாடல் திறன், சாராம்சப்படுத்தல், விவரித்தல் மற்றும் ஆக்கத்திறன் ஆகிய திறன்களை அளவிட வடிவமைக்கப்பட்ட புறவய வினாக்களைக் கொண்டது. |

**(ஆ) அரசாங்க நிறைவேற்று உத்தியோகத்தர் வகுதியின் தரம் III இல் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கான பொதுப் போட்டிப் பரீட்சையின் இரண்டாவது பகுதி (இலங்கை விவசாய சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விசேட பகுதி)**

(I) சாராம்சம்

| *வினாப்பத்திரம்* | *காலம்* | *வினாப்பத்திரத்தின் தன்மை* |
|---|---|---|
| விடய அறிவை அளவிடுதல்<br><br>(விவசாய ஆராய்ச்சித் துறை, விவசாய அபிவிருத்தித் துறை, விவசாயப் பொருளியல் துறை போன்ற மூன்று துறைகளின் கீழ் மூன்று வினாப்பத்திரங்கள் வழங்கப்படும்) | 02 மணித்தியாலங்கள் | 100 புள்ளிகள், சித்தியெய்துவதற்காகப் பெற்றுக்கொள்ள வேண்டிய புள்ளிகள் 40.<br><br>இது குறிப்பிடப்பட்டுள்ள பாடத் துறை பற்றிய அறிவைப் பரிசீலிப்பதற்காக நடாத்தப்படும் எழுத்து மூல உளச்சார்புப் பரீட்சையாகும். ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தான் விண் ணப்பிக்கின்ற பதவிக்கு அல்லது பதவிகளுக்கு ஏற்றவாறு தேர்ந்தெடுக்கும் வினாத்தாள்களுக்கு விடையளித்தல் வேண்டும். இந்த வினாத்தாள் குறுகிய வினாக்களையும் பல்தேர்வு வினாக்களையும் உள்ளடக்கியிருக்கும். இவ்வினாத்தாள்கள் ஏற்புடைய துறையின் கோட்பாடு ரீதியான அறிவுக்குக் கூடிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டுத் தயாரிக்கப்படும். |

(II) பாட விதானம்
ஒவ்வொரு பதவிக்குமுரிய பாடவிதானங்கள் பின்வருமாறு

I. **விவசாய ஆராய்ச்சித் துறைக்கான வினாத்தாள்:**
விண்ணப்பதாரர்களினது விருப்பத்தின் பேரில் கீழ்க்காணும் (அ) மற்றும் (ஆ) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள 02 பகுதிகளில் ஒரு பகுதிக்கு மாத்திரம் விடையளிக்கப்படுதல் வேண்டும்.

(அ) பகுதி:

01. விவசாயத் தாவரவியல் :
தாவர வகுதிகள் பற்றிய கோட்பாடுகள், தாவரங்களின் வளர்ச்சி மற்றும் பௌதீகவியல் கோட்பாடுகள்.

02. பாரம்பரிய தாவர இனப்பெருக்கம்:
மென்டலின் கோட்பாடு, பாரம்பரிய இனப்பெருக்கம், பாரம்பரிய அணு மாற்றம், இளையங்கள் வளர்ப்பு, கணிய மரபியல், தாவர இனப்பெருக்கக் கோட்பாடுகள், மரபணு வளங்கள் பாதுகாப்பு, உயிர் பல்வகை தன்மை, மகரந்த சேர்க்கை இனப்பெருக்கக் கோட்பாடுகள், விகாரமடைதல், கலப்பின மற்றும் கலப்பினமற்ற தாவரங்கள், பரந்தளவில் பயன்படுத்தப்படுகின்ற தாவர இனப்பெருக்க முறைகள் மற்றும் தற்போதைய போக்குகள்.

03. தாவர நோயியல்:
நோய்க் கிருமிகளின் வகை, தொற்றுகின்ற விதம், இவற்றைக் கட்டுப்படுத்தும் கோட்பாடுகள், தாவர நோயியலும் நோய்க் கட்டுப்பாடும் பற்றிய தற்போதைய போக்குகள், நோயைக் கண்டறியும் நுட்பங்கள், நோய் பண்பியல்பு, கொக்கின் கருதுகோள் பிரயோகம், நோய் கண்டறியும் நவீன நுட்பங்கள் (நுடுஐளுயு) மற்றும் தற்போதைய போக்குகள்.

04. பூச்சியியல் அடிப்படைக் கோட்பாடு:
விலங்கியல் பாகுபாட்டுக் கோட்பாடுகள், கிருமி வகைகளின் இயல்பு, வாழ்க்கை வட்டத் தகவல்கள், பாதிப்புகள், பூச்சி அழிவின் பொருளாதார முக்கியத்துவம், பூச்சிகளின் குடுத்தொகை, அழிவு பற்றிய மதிப்பீடு.

05. விதைத் தொழில்நுட்பம்:
விதைப் பௌதீகவியல், விதைக் கட்டமைப்பு, செயலற்று முளைத்தல், உயிர் வாழ்தல், நம்பகத்தன்மையும் தூய்மை பற்றிய சோதனையும், விதை உற்பத்திக் கட்டங்கள், விதைகளைச் சான்றுபடுத்தல், விதைகளைக் களஞ்சியப்படுத்தல்.

06. இழைய வளர்ப்பு:
கோட்பாடுகள், இழைய வளர்ப்பு வசதிகளும் தேவைகளும், மூலங்கள், இழைய வளர்ப்பு முறைகளின் பிரயோகங்கள், முதலுரு தாவர வளர்ப்பு முறை, விகாரமடைந்து புதிதாகத் தோன்றுதல், கரு மீட்பு, செயற்கைக் கருத்தரிப்பு, மரபணுப் பரிணாமங்கள், ப்ராக் பாதுகாப்பு.

07. விவசாய இரசாயனவியல்:
உயிர் இரசாயனவியல் கோட்பாடுகள், விவசாயத்தில் உயிர் இரசாயனவியலின் செயல்முறைப் பிரயோகங்கள், உணவு இரசாயனவியல் பற்றிய கோட்பாடுகள், விவசாய உணவு இரசாயனவியலின் செயல்முறைப் பிரயோகங்கள், பகுப்பாய்வு ரீதியான இரசாயனவியல் பற்றிய கோட்பாடுகள், விவசாயத்தில் காணப்படும் செயல்முறைப் பிரயோகங்கள்.

அல்லது

(ஆ) பகுதி

01 தாவரவியல்:
விவசாயக் காலநிலையியல், சுற்றாடல், நில அபிவிருத்தி, நிலப் பண்படுத்தல், பயிர்வளர்ச்சியும் பௌதீகவியலும் பற்றிய கோட்பாடுகள், பயிர் வளர்ச்சி அளவீடு, அறுவடைச் சுட்டிகள், பசளையின் சிபாரிசும் வினைத்திறனும், களை உயிரியலும் கட்டுப்பாடும், நீர்ப்பாசன முறைகள் பற்றிய கோட்பாடுகள், பயிர்ச் செய்கை மண் மற்றும் நீர் தொடர்புகள் பற்றிய கோட்பாடுகள்.

02. பயிர் விஞ்ஞானம்:
நெல், மேட்டுநிலத் தானியப் பயிர்கள், பயிரினங்கள், கிழங்குப் பயிர்கள் மற்றும் ஏனைய வயல் பயிர்கள் என்பவற்றின் பௌதீகவியல், பரவல் முறைகள், தாவர நடுகை முறைகள், பயிர்கள் பராமரிப்பு பௌதீகவியல், இரசாயன உயிரியல் முறை, விஞ்ஞான ரீதியில் செயற்கைப் புல் நிலங்களை அமைத்தல், அவற்றைப் பராமரித்தல், மர உற்பத்திகளும் பழ உற்பத்திகளும் பற்றிய கோட்பாடுகள்.

03. மண்ணியல்:
மண் உருவாக்கம், மண்ணின் பௌதீக மற்றும் இரசாயனப் பண்புகள், பயிர்கள் சம்பந்தமான மண்ணிலுள்ள பிரச்சினைகள், மண் வளப் பராமரிப்பு, நடுகைக் கன்றுகள் போஷணை, நடுகைக்கன்றுகள் வகைப்படுத்தல் பற்றிய கோட்பாடுகள்.

04. பாரம்பரிய தாவர இனப்பெருக்கம் :
மென்டலின் கோட்பாடு, பாரம்பரிய இனப்பெருக்கம், விகாரங்கள், மூலக்கூறு மரபியல், தாவர இனப்பெருக்கக் கோட்பாடு, தாவர வளங்கள் பாதுகாப்பு மற்றும் உயிர் பல்வகைமை.

05. தாவர நோயியல்
தாவர நோய்கள், நடுகைக்கன்றுகள் நோய்த்தொற்றுக்களுக்கு ஈடுகொடுக்கும் விதம், உயிரியல் கட்டுப்பாடு, நோய்க் கட்டுப்பாட்டு நவீனப் போக்குகள்.

06. பூச்சியியல் அடிப்படைக் கோட்பாடுகள்
(அ) வினாத்தாளின் 04 ஆம் அறிவுரைகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

07. கள ஆராய்ச்சிக் கோட்பாடுகள், புள்ளிவிபரவியல் கோட்பாடுகள்: (Statistical Principles) இலங்கையின் விவசாயத் துறையினது முக்கியமான புள்ளிவிபரங்கள் பட்டியல் பற்றிய அறிவு.

08. பூச்சியியல்
விவசாயத்தில் காணப்படுகின்ற பொருளாதார ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பூச்சிகள், அவற்றின் வகுதிகள், உள்ளக மற்றும் வெளியகப் பண்புகள், பல முறைமைகளின் கட்டமைப்பும் மற்றும் அவற்றின் தொழிற்பாடுகளும், பூச்சிகள் கட்டுப்பாடு, பூச்சிகளின் அழிவு முக்கியத்துவம், கிருமிகளை இனங்காணுதல், அவற்றின் பாதிப்புகளும் கட்டுப்பாடும், ஒன்றிணைந்த பூச்சிக் கட்டுப்பாடு.

09. நுண்ணுயிரியல்
நுண்ணங்கிகள் மற்றும் விவசாயம் சார்ந்த சுற்றாடல், உயிரியல் தொழில்நுட்ப விவசாயத்திற்கான பிரயோகம், மண்ணிலுள்ள நுண்ணங்கிகளும் விவசாயத்தின் மீது அவற்றின் தாக்கங்களும்.

10. உயிரினப் புள்ளிவிபரவியலும் பிரயோகப் புள்ளிவிபரங்களும்:
புள்ளிவிபரவியல் சம்பந்தமான அடிப்படை அறிவு, விவசாய ஆராய்ச்சி, திட்டப் பகுப்பாய்வு, தரவுகளைப் பெற்றுக்கொள்ளுதல் மற்றும் தகவல் பகுப்பாய்வுகள்.

குறிப்பு:- திறந்த போட்டிப் பரீட்சையினூடாக உதவி விவசாயப் பணிப்பாளர் (விவசாய ஆராய்ச்சி) பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் சகல பரீட்சார்த்திகளும் மேற்குறித்த (அ) அல்லது (ஆ) ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள 02 பகுதிகளில் ஏதாவது ஒரு பகுதிக்கு மாத்திரம் விடையளிப்பது அவசியமாகும்.

## II. விவசாய அபிவிருத்தித் துறைக்கான வினாத்தாள்

01. பொது விவசாயம்:
இலங்கையின் காலநிலை வலயங்கள், காணிகள் அபிவிருத்தி, நிலத்தைப் பண்படுத்தல், உபகரணங்கள், பயிர்கள் தாபிப்பு அதற்குத் தேவையான இயந்திர உபகரணங்கள், மண்ணும் மண் வளமும், நாற்று மேடைகளும் நாற்றுமேடைப் பராமரிப்பும், தாவர மூலப்பொருட்கள், பூச்சிகள் கட்டுப்பாடு, தாவர நடுகைக்கன்றுகள் பாதுகாப்பு, உபகரணங்கள், பயிர்ச் செய்கை முறை, நீர்ப்பாசன முறை, ஒன்றிணைந்த விவசாயம், பாதுகாப்பான விவசாயம், நுண் நீர்ப்பாசன முறை, அறுவடையும் அறுவடை உபகரணங்களும், அறுவடைக்குப் பின்னர் நிகழும் இழப்புகள்,

பண்ணை சார்ந்த உற்பத்திகள் தயாரிப்பு, விஷேட பிரதேசங்களில் பயிரிடுவதற்குப் பொருத்தமான மரக்கறிப் பயிர்கள், பழப் பயிர்கள், உலர் வலயப் பயிர்கள் மற்றும் தானியத்தைத் தேர்ந்தெடுக்கும் போது கவனிக்க வேண்டிய விடயங்கள், ஒன்றிணைந்த பூச்சிக் கட்டுப்பாடு, ஒன்றிணைந்த தாவர நடுகைக் கன்றுகள் முறைமை, தாவரங்கள் பாதுகாப்பு பற்றிய சட்டம், மண் பாதுகாப்பு பற்றிய சட்டங்கள்.

02. பயிர் உற்பத்தி:
தாவரவியல், விவசாயக் காலநிலை மற்றும் சுற்றாடல், நில அபிவிருத்தி மற்றும் பண்படுத்தல், பயிர்களின் வளர்ச்சிக் கோட்பாடு மற்றும் நடுகைக்கன்றுகளின் பௌதீகவியல், பயிர்களின் வளர்ச்சியை அளவிடுதல், அறுவடைச் சுட்டிகள், பசளைகளின் சிபாரிசு, பசளைகளின் வினைத்திறன், களைத் தாவரங்களின் உயிரியல் கட்டுப்பாடு, நீர்ப்பாசனம், விவசாயவியல், பயிர்கள் மற்றும் நீர் என்பவற்றுக்கு இடையிலுள்ள தொடர்புகள் பற்றிய கோட்பாடுகள்.

03. களப் பயிர்கள்:
அறிமுகம், சுற்றாடல் தேவைப்பாடுகள், தாவர வகுதிகள் மற்றும் இனங்கள், நடுகைக்கன்று வளர்ச்சி, பௌதீகவியல், விளைச்சலை நிர்ணயிக்கும் பௌதீக விஞ்ஞான கோட்பாடுகள், நெற் பயிரின் விவசாயவியல், பயிர் பராமரிப்பு மற்றும் உற்பத்திகள், மேட்டுநிலத் தானியங்கள், பயிரினங்கள், கிழங்குப் பயிர்கள் மற்றும் ஏனைய முக்கியமான களப் பயிர்கள் (புகையிலை, வெங்காயம், நார் தாவரங்கள் மற்றும் எண்ணெய் தரும் பயிர்கள்).

04. பயிர்கள் பராமரிப்பு:
இடைப் பயிர்ச் செய்கை, அறுவடை மற்றும் பதனிடுதல்

05. தோட்டப் பயிர்கள் உற்பத்தி:
பழங்கள் உற்பத்தி, போஷணை பெறுமானம், சமூகப் பொருளாதாரக் காரணிகள், ஆரம்பம் மற்றும் பரிணாமம், சுற்றாடல் தேவைப்பாடுகள், பயிர்ச் செய்கை முறை, நவீன தொழில்நுட்ப முறைகளின் பாவனை.

06. பழங்கள், மரக்கறி வகைள் மற்றும் பூக்கள் உற்பத்தி:
நாற்றுமேடைப் பராமரிப்பு, தோட்டப் பயிர்கள் பராமரிப்பு, பயிர்கள் மைய புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் பயிர்ச்செய்கை முறைகள், பழப் பயிர்களினதும் மரக்கறிப் பயிர்களினதும் பயிர்ச் செய்கை மேம்பாடு, பழ வகைகளையும் மற்றும் மரக்கறி வகைகளையும் அடிப்படையாகக் கொண்ட பயிர்ச் செய்கை முறைகள், அறுவடைக்குப் பின்னர் நிகழும் இழப்புகள், பழங்களினதும் மற்றும் மரக்கறி வகைகளினதும் அறுவடைக்குப் பின்னர் நிகழும் இழப்புகளைத் தவிர்த்துக் கொள்ளுதல், பல்லுயிரினத் தொழில்நுட்பம், பழங்களுக்கும் மரக்கறி வகைகளுக்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் நிலவும் சந்தை வாய்ப்புக்கள், நவீன வரையறைகள் மற்றும் எதிர்காலத் தந்திரோபாயங்கள், மரக்கறி உற்பத்திக்கான தேவைகள், மரக்கறி வகைகளை அடிப்படையாகக் கொண்ட பயிர்ச் செய்கை முறைகள், சந்தைப்படுத்தல், பூ உற்பத்தி சார்ந்த கைத்-தொழில்கள், விளம்பரத் தொழில்நுட்பம், பயிர்ச் செய்கை முறைகள், உன்னத நியமங்கள், நில அழகுபடுத்தல் பற்றிய கோட்பாடுகள்.

07. விவசாய விஸ்தரிப்பும் பயிற்சியும்:
விவசாய விஸ்தரிப்பு பற்றிய வரைவிலக்கணம் அவற்றின் குறிக்கோள்கள், விவசாயக் கைத்தொழில் அபிவிருத்தி விவசாய விஸ்தரிப்பு, கண்டுபிடிப்புகளைப் பின்பற்றல் மற்றும் பரப்புதல், தொடர்பாடல், விஸ்தரிப்பு பற்றி போதிக்கும் முறைகள், இலங்கையில் பயன்படும் விஸ்தரிப்பு அணுகுமுறைகள், ஆராய்ச்சி விஸ்தரிப்பு சம்பந்தமான தொடர்புகள், விஸ்தரிப்பு சார்ந்த நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடல், மீளாய்வு மற்றும் மதிப்பீடு, இலங்கையின் விவசாய விஸ்தரிப்பு மற்றும் அதனுடன் சம்பந்தப்படும் நிறுவனங்கள், முதியோர் கல்வி, பயிற்சி சார் நடைமுறைகள், பயிற்சி சார்ந்த தேவைப்பாடுகளைக் கண்டறிந்துகொள்ளும் பொருட்டு பயன்படும் பல வழிமுறைகள், பாடத் திட்டங்களைத் தயாரித்தல், பயிற்சிகள் பற்றிய மதிப்பீடு, பயிற்சிகளுக்கான கட்புல செவிப்புல சாதனங்கள் பயன்பாடு.

08. விதைத் தொழில்நுட்பம் :
விதைகளின் பௌதீகவியல், விதைக் கட்டமைப்பு, விதையின் உருவமைப்புகள், விதை முளைத்தல், விதை முளை திறன், விதைகள் பரிசோதனை, விதைகள் முளை திறன் மற்றும் விதைத் தூய்மை பற்றிய பரிசோதனை, விதை உற்பத்திக் கட்டங்கள், விதைகள் சான்றுபடுத்தல், விதைகள் களஞ்சியப்படுத்தல்.

09. தேனீ வளர்ப்பு
ஒரு தேன் கூட்டிலுள்ள தேனீக்கள் வகை மற்றும் தேன் வதைகள், தேனீ வளர்ப்புப் பெட்டிகளின் பாகங்கள், தேனீக்களைப் பிடித்து நிலைப்படுத்தல், கூண்டினுள் அடைத்து வளர்த்தல், வகைப்படுத்தல், ஒரு தேன் கூட்டிலுள்ள கிருமிகள் மற்றும் நோய்கள்.

III. **விவசாயப் பொருளியல் துறைக்கான வினாத்தாள்**

*01.* *விவசாய உற்பத்திகள் பொருளியல் மற்றும் பண்ணைகள் பராமரிப்பு*

*விவசாய உற்பத்திப் பண்ணைகள் பராமரிப்பிலுள்ள முக்கியத்துவம், அடிப்படை எண்ணக்கரு, உற்பத்தித் தொழிற்பாடுகள், உற்பத்தித் தொழிற்பாடுகள் அமைப்பு, உற்பத்திப் பரப்புகள், ஏனைய ISO, ISO உயிர்ச்சாய்வு, ISO வருமான வழிகள், வளங்கள் இணைப்பு மற்றும் செலவுகளைக் குறைத்தல் பற்றிய கோட்பாடுகள், பிரதியீடு மற்றும் வருமான விளைவுகள், விவசாயத்திலுள்ள ஆபத்து மற்றும் நிச்சயமற்ற தன்மைகள் என்பவற்றுக்கு முகம்கொடுப்பதற்கான உற்பத்தித் தயாரிப்பு நெகிழ்வு மற்றும் பல்லுயிரினத் தன்மை, விவசாயப் பொருட்களுக்கான விஷேட விலையை நிர்ணயிக்கும் தத்துவம், தாவரங்கள் மற்றும் விலங்குகள் என்பவற்றின் இணைந்த கூறுகள் பற்றிய மதிப்பீடு, பண்ணை ஸ்தலங்கள் மற்றும் அளவு பயன், கூட்டுப் பண்ணைகளின் முக்கியத்துவம் மற்றும் ஒத்தீட்டு நன்மைகள் பற்றிய கோட்பாடுகள், பண்ணைகளின் பொறிமுறை சார்ந்த சக்தி மற்றும் பலவீனங்கள் முதலிய விடயங்களை நிர்ணயிக்கும் அறிக்கைகளிலுள்ள முக்கியத்துவம் மற்றும் அனுகூலப்படுத்தும் மாதிரிகளில் இந்தத் தகவல்களை உள்ளடக்குதல்.*

*02.* *விவசாய சந்தைப்படுத்தல்*

*சந்தைப்படுத்தல் கோட்பாடுகள் மற்றும் உற்பத்தியினதும் சந்தைப்படுத்தலினதும் ஒத்தீட்டு ரீதியான முக்கியத்துவம், இலங்கையில் சந்தைப்படுத்தல் விடயத்துடன் சம்பந்தப்படும் நிறுவனங்கள், சந்தைப்படுத்தல் வழிமுறைகளின் வளர்ச்சியில் விளைவுகளை எற்படுத்துவதில் அத்தகைய நிறுவனங்களின் பங்களிப்புகள், இலங்கையில் விவசாய உற்பத்திகளை சந்தைப்படுத்துவதில் எதிர்நோக்குவதற்கு நேரிடுகின்ற பிரச்சினைகள் மற்றும் சந்தைப்படுத்தல் வினைத்திறன் மேம்பாடு பற்றிய கோட்பாடுகள்.*

*03.* *காணிகள் பொருளியல்*

*பொருளாதார விஞ்ஞான எண்ணக்கருக்கள் நிலப்பாவனையில் செல்வாக்குச் செலுத்தும் விதங்கள், இலங்கையில் காணிகளுக்கான கேள்வி மற்றும் நிரம்பல், காணிகள் பரிசீலனை விடயங்கள் இலங்கையில் திட்டமிடப்படும் விதங்கள், இலங்கையில் விவசாயக் குடியேற்றங்களைத் தாபித்தல் மற்றும் மக்களைக் குடியேற்றுதல் சம்பந்தமான நிகழ்ச்சித்திட்டங்களின் முக்கியத்துவம்.*

EOG 04 - 0213

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*